மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பூம்புகாரைப் பொறுத்தவரையில், அந்தக் கடலோரப் பகுதியிலே எவ்வளவு செலவாகும் என்பது குறித்து மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. அது வந்த பின் முடிவெடுக்கப்படும். பொதுவாகவே, கிழக்குக் கடலோரப் பகுதிகளில் இதேபோல கடல் அரிப்பினுல் பாதகம் ஏற்படுகிறது. அவற்றை எல்லாம் தடுக்கின்ற வகையில் எல்லா இடங்களுக்கும் சேர்த்து ஒரு சிறப்பான திட்டம் வகுக்கப்படுவதற்கு இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது.

(5) 1977-78 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1977-78 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம். இப்போது 3 மணி 40 நிமிடம் இருக்கிறது. அதற்குள் கனம் உறுப்பினர்கள், திரு. மாரிமுத்து, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், அவை முன்னவர் அவர்கள் ஆகியோர் பேச வேண்டும். திரு. மாரிமுத்து அவர்கள் சுருக்கமாக எவ்வளவு நேரத்தில் முடித்துக் கொள்வார்கள் என்று சொன்ஞல் நன்ருக இருக்கும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : நான் தங்களிடம் ஒரு மணி நேரம் வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அதற்குள் எவ்வளவு சீக்கிரம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு மணி நேரம் தாராளமாக எடுத்துக் கொள்ளுங்கள். அதற்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

(6) தகவல் கோரல்.

முதலமைச்சர் மகாநாட்டின் முடிவுகள்குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் இன்பர்மேஷன், சார் நேற்றைய தினம் நான் தங்களிடம் கேட்டதற்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் உடல்நிலை சரியில்லை, ஆகவே டெல்லியில் நடந்த காரியங்கள் பற்றி நாளைய தினம் இந்த சட்ட மன்றத்திலே அறிவிப்பார்கள் என்று கூறியிருந்தீர்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிவிப்பார்கள் என்று சொல்லவில்லை. அவர்களைக் கேட்டுத் தகவல் இருந்தால் தெரிவிப்பார் என்று சொன்னேன்.

1977 ஆகஸ்ட் 3)

திரு. ஜே. ஜேம்ஸ் : அவர்களைக் கேட்டுத் தகவல் இருந்தால் தெரிவிப்பார்கள் என்று சொன்னீர்கள். இன்றைய தினம் அவையில் வந்திருக்கிறார்கள். அவர் டெல்லியிலே சென்று முதலமைச்சர் மாநாட்டில் கலந்து கொண்டதன் சம்பந்தமாக, அங்கே என்னென்ன முடிவுகள் எடுக்கப்பட்டன என்பதை, இந்த அவைக்கு முதலமைச்சர் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ஏற்கனவே ஏடுகளில் வெளியிடப்பட்டுள்ளன.

* திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, முதலமைச்சர் சொல்லியதிலிருந்து ஒரு சிறு பிரச்னை எழுகிறது. அது பிரச்னையாக இருந்தால் நீங்கள் தீர்ப்பு கூறுங்கள். சட்டமன்றம் கூடி இருக்கும்போது ஒரு முதலமைச்சர் அவர்களுடைய கருத்தும் அரசாங்கத்தின் கருத்தும் ஏடுகளில் வந்திருப்பதைப் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்வது சட்டமன்றத்தின் முதல் உரிமைக்கு மாறுபட்ட ஒன்று. எனவே, சாதாரணமாக, முதலமைச்சர் அரசாங்கத்தின் சார்பாகக் கூறுவதை சட்டமன்றத்திற்குச் சொல்லிவிட்டுதான் ஏடுகளுக்கு சொல்ல வேண்டும் மென்று ஒரு மரபு இருக்கிறது. ஏடுகளிலே வந்திருந்தாலும், சட்டமன்றத்திற்கு அதனைச் சொல்ல முதலமைச்சர் முன்வருவாரா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அத்தகைய அவசியம் ஏற்பட்டால் தெரிவிப்பேன்.

(6) 1977–78-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த அவையிலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கும் நிதி நிலை அறிக்கையின் பேரிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நான் முன் வந்துள்ளேன்.

தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கை 30 கோடி ரூபாய் துண்டு விழக்கூடிய ஒரு நிதி நிலை அறிக்கையாகத் கொடுக்பட்டுள்ளது. இந்த 30 கோடி ரூபாயையும் எப்படிச் சரிக் கட்ட முடியும் என்பது பற்றி நாம் ஆலோசிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். வருவாய் தரப்பிலே, 30 கோடி ரூபாய் துண்டு விழுவது ஒரு பக்கம் இருந்தாலும் ஒட்டுமொத்தமாக உள்ள நிதி நிலையிலே 18·88 கோடி ரூபாய் துண்டு விழுவதாகவும் அறிவித்திருக்கிறார்கள். வருவாய்த் துறையிலே 30 கோடி துண்டுவிழுந்தால் கூட ஒட்டு மொத்தமான நிதிநிலையிலே நமக்குத் துண்டு விழாமல் இருக்குமானால் அது அரசுக்கு அதிக சிரமம் கொடுக்காத ஒன்றாக இருந்து இருக்க முடியும். ஆனால் வருவாய்த் துறையிலே துண்டு